**செய்தி வெளியீடு எண்: 684** **நாள்: 21.09.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>தமிழ்நாட்டைச் சேர்ந்த மேசைப்பந்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் பயிற்சியாளரான திரு. A.சீனிவாச ராவ் அவர்களுக்கு மத்திய அரசு துரோணாச்சாரியர் விருது வழங்கியதையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.9.2018) திரு. A.சீனிவாச ராவ் அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:</u>**

அன்புள்ள திரு. சீனிவாச ராவ் அவர்களுக்கு,

சர்வதேச அளவில் நடைபெற்ற பல்வேறு மேசைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் வீராங்கனைகளுக்கு பயிற்சி அளித்து, இந்திய நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் வீரர், வீராங்கனைகளை உருவாக்கிய தங்களுக்கு இந்திய அரசு துரோணாச்சாரியர் விருது வழங்கி கௌரவித்துள்ளதற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தாங்கள் மேசைப்பந்து போட்டிகளில் மேன்மேலும் பல பயிற்சியாளர்களை உருவாக்கி, சாதனை படைத்திட எனது அன்பான நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை .9.**

**நாள் : 21.9.2018**